விலை 4 … 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 30 (15.11-93) திங்கட்கிழமை ஓசை 270

## கடற்கரும்புலிகளின் உருவப்படங்கள் இன்றுஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும்


பூநகரி கடற்படை தாக்குதலின் வெற்றிக்கு வித்தாகிய கடற் கரும்புலியாகிய மேஜர் கணேஸ் (நாகநாதி ஜீவநேசன், நவக்கிரி புத்தூர் மேற்கு), மேஜர் கோபி (சுப்பிரமணியம் செல்வலிங்கம், பல்லவராயன்கட்டு மன்னார்) ஆகியோரின் உருவப் படம் தாங்கிய அலங்கார ஊர்தி இன்று காலை 10-00மணியிலிருந்து நவக்கிரி புத்தூரில் அமைந்துள்ள மேஜர் கணேசின் இல்லத்திலிருந்து ஆரம்பமாகி மக்கள் அஞ்சலிக்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அலங்கார ஊர்தி நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், மானிப்பாய், ஆனைக்கோட்டை, நாவாந்துறை, குருநகர், அரியாலை, கண்டி வீதியூடாக கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை, கடற்கரை வீதி வழியாக வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வல்வை வீதியூடாக அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் ஊடாக [4ஆம் பக்கம் பார்க்க]

# பூநகரி படைத்தளத்தில் ஏற்பட்ட பேரிழப்பு;

# ராணுவ அரசியல் வட்டாரங்களில் நெருக்கடி!



தேசியத் தலைவர் பிரபாகரனுடன், பூநகரி-நாகதேவன்துறை முகாம் தகர்ப்பில் வீரச் சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் கோபி



## வடக்கு முகாம்கள் பற்றி கவலை

(கொழும்பு)

**பூநகரி - நாகதேவன்துறை படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டமையும் இத் தாக்குதலில் நூற்றுக் கணக்கான இராணுவத்தினரும், கடற்படையினரும் கொல்லப்பட்டமையும் சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை இத் தாக்குதலில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டமை காரணமாக அரசிற்கெதிராக கிளம்பியுள்ள ஆத்திரம் அரசிற்குப் பெரும் நெருக்கடியை உருவாக்கியும் உள்ளது.**

ஆயிரக்கணக்கில் படையினரைக் கொண்டிருந்த இராணுவ - கடற்படை கூட்டுத் தளம் ஒன்றை ஒரே இரவில் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தமையானது சிறிலங்கா இராணுவ, மற்றும் அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வளவு விரைவாக ஒரு கூட்டுப் படைமுகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழிப்பதென்பது இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பெரும் குழப்பத்தை தோற்றுவித்துள்ளது.


இந்நிலையில், வடக்கில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் குறித்து சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில பலத்த கேள்வி எழும்பியுள்ளதாகவும், அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தீவிரமாக சிந்திக்கவேண்டிய நிலையில் இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

மேலும் இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 7ஆம் திகதி தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன் தினம் வீரச்



## பூநகரிமுகாம் படையினரின் பெற்றோர்கள் ஆவேசம்

(கொழும்பு)

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீது விடுதலைப்புலிகள் தாக்கி அழித்ததை அடுத்து அம்முகாமில நிலை கொண்டிருந்த படையினரின் பெற்றோரும் உறவினரும் கலவரமும், ஆத்திரமும்கொண்ட நிலையில் தெற்கிலுள்ள இராணுவ முகாம்களை முற்றுகையிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் முகாம் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட செய்தியை அறிந்து தமது பிள்ளைகளின் நிலையை அறியவே இவ்வாறு பெற்றோர் கொழும்பு இராணுவ, கடற்படை தலைமை அலுவலகம், அநுராதபுரம், வவுனியாபடைமுகாம்களுக்கு படையெடுத்து வருவதாக தெரியவருகிறது.

ஆனால் இவர்களுக்கு ஒரு (4 ஆம் பக்கம் பார்க்க)



தேசியத் தலைவர் பிரபாகரனுடன், பூநகரி-நாகதேவன்துறை முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் கோபி



பூநகரி - நாகதேவன்துறை முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த கடற்கரும் புலி மேஜர்கணேஸ் படகில் காணப்படுகிறார்

# தென்மராட்சிப் பகுதியில் 'சுப்பர்சொனிக்' குண்டுவீச்சு

### ஏழு பேர் படுகாயம்

(தென்மராட்சி)
சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ''சுப்பர் சொனிக்'' விமானங்கள் தென்மராட்சிப்பகுதியில் உள்ள குடமியன், மிருசுவில் பகுதிகளில் அகோரக் குண்டுத்தாக்குதல் நடாத்தியுள்ளன.

நேற்றுப் பிற்பகல் 5.35 மணியளவில் மேற்படி பகுதிக்கு வந்த இரண்டு சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்கள் திடீரென குண்டுத் தாக்குதல்களையும் றொக்கற் தாக்குதல்களையும் நடாத்தின. மேற்படி பகுதியில் காணப்பட்ட தென்னம் தோப்புக்களும் பொதுமக்களின் குடியிருப்புக்களும் பலத்த சேதமடைந்தன. இப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### எறிகணை வீச்சு

(மல்லாகம்)
நேற்றுப் பகல் 12-15 மணி அளவில் மண்டைதீவு பகுதியிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகளில் ஒன்று மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டச் சந்திப் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்டது. சிவன் பண்ணைப் பகுதியில் 3 மணியளவில் (அதிகாலை) வீழ்ந்து வெடித்த எறிகணையினால் ஒரு வீடு சேதமடைந்தது. (09)

## பூநகரி முகாம் தகர்ப்பு; சிங்களவர் மத்தியில் பீதி!

### பி.பி.ஸி. தெரிவிப்பு

(கொழும்பு)
பூநகரி இராணுவ கடற்படை கூட்டுத்தளம் அழிக்கப்பட்டது தென்னிலங்கையில் சாதாரண பொதுமக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இனவாத உணர்வலைகள் எதனையும் ஏற்படுத்தவில்லை எனவும் ஏ.எவ்.பி.செய்தியாளர் அமால் ஜெயசிங்க தெரிவித்தார்.

பீ பி.ஸி. க்கு அவர் மேலும் தெரிவிக்கையில் சாதாரண பொதுமக்கள் இதனை ஒரு பொருட்டாக கருதவில்லை

(4 ஆம் பக்கம் பார்க்க)

தளம் ஒன்றை ஒரே இரவில் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தமையானது சிறிலங்கா இராணுவ, மற்றும் அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது இவ் ... பது இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பெரும் குழப்பத்தை தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில், வடக்கில் ... குறித்து சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில பலத்த கேள்வி எழும்பியுள்ளதாகவும், அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தீவிரமாக ... வட்டாரங்களில் ஆருதப்படுகின்றது.

மேலும் இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் கடந்த 7ஆம் திகதி தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன் தினம் வீரச்



மேஜர் பூவழகு (விக்கி)



லெப. நீதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிமுகாம் படையினரின் பெற்றோர்கள் ஆவேசம்

(கொழும்பு)
பூநகரி-நாகதேவன் துறை கூட்டுத்தளம் மீது விடுதலைப்புலிகள் தாக்கி அழித்ததை அடுத்து அம்முகாமில நிலைகொண்டிருந்த படையினரின் பெற்றோரும் உறவினரும் கலவரமும், ஆத்திரமும்கொண்ட நிலையில் தெற்கிலுள்ள இராணுவ முகாம்களை முற்றுகையிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் முகாம் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட செய்தியை அறிந்து தமது பிள்ளைகளின் நிலையை அறியவே இவ்வாறு பெற்றோர் கொழும்பு இராணுவ, கடற்படை தலைமை அலுவலகம், அநுராதபுரம், வவுனியா படைமுகாம்களுக்கு படையெடுத்து வருவதாக தெரியவருகிறது.

ஆனால் இவர்களுக்கு ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 25 கோடி பெறுமதி மிக்க ஆயுதத்தைபடை இழந்தது

(லண்டன்)
பூநகரி இராணுவ கடற்படை கூட்டு முகாமிலிருந்து புலிகளால் கைப்பற்றிச் செல்லப்பட்ட இராணுவ தளபாடங்களின் பெறுமதி 25 கோடி ரூபா வென பி. பி. ஸி. தெரிவித்தது.

பூநகரி முகாம் அழிப்பு குறித்த கண்ணோட்டத்தில் மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகள் பூநகரி முகாமை அழித்து அங்கிருந்து ஆயுதங்களை எடுத்துச்சென்ற நடவடிக்கை வடபகுதியில் உள்ள ஏனைய முகாமகளுக்கும் ஆபத்து காத்துள்ளது என்பதை காட்டுவதாக உள்ளது என பி. பி. ஸி. குறிப்பிட்டது. காயப்பட்ட இராணுவத்தினர் இப்போது ஆகற்றப்படுகின்றனர். மேலதிக படையினர் இங்கு வந்துசேர்ந்த பின்னரே இது ஆரம்பமானது.

புலிகள் இராணுவத்திற்கு நாசம் விளைவித்தது மட்டுமல்ல 25 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுவிட்டனர்.

பூநகரி இராணுவ முகாமையும் நாகதேவன்துறை கடற்படை முகாமையும் அழித்து விட்டு புலிப்படைகள் திரும்பிச் சென்றுவிட்டனர். இவ்வாண்டு ஆரம்பத்தில் ஜனக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளராக டி.பி. விஜேதுங்க தெரிவு

### ஐ. தே. க. செயற்குழு முடிவு

(கொழும்பு)
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவை அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நியமிப்பது என ஐ. தே. க செயற்குழு நேற்று ஏகமனதாக முடிவெடுத்தது அமைச்சர் விஜேபால மென்டிஸ் இவரின் பெயரை முன்மொழிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதை வழிமொழிந்தார். இதன்போது ஜனாதிபதிடி. பி. விஜேதுங்கவும் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு விசுவாசமாக செயற்படுவதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் ராணுவத்தின் தோல்வி; பத்திரிகைகள் அரசுமீது பாய்ச்சல்

### கட்டாய இராணுவ சேவையை அமுலாக்க வற்புறுத்து

(கொழும்பு)
பூநகரியில் சிறிலங்கா இராணுவம் சந்தித்த பெருந் தோல்வியைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினரும், கொழும்பிலிருந்து வெளிவரும், சிங்கள ஆங்கில பத்திரிகைகளும்அரசு மீது பெரும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. பாதுகாப்பிற்கென ஓர் அமைச்சர் இல்லாததைக் கண்டித்துள்ள இப்பத்திரிகைகள், தோல்விக்கு, அரசாங்கமே முழுப்பொறுப்பு எனவும், இராணுவத்தை வழிநடத்தக்கூடிய ஒரு அரசியல் தலைமை இல்லை எனவும் குறைகூறியுள்ளனர். இதே வேளை கட்டாய இராணுவ சேவையை அரசு அமுல்படுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளன.

விடுதலைப் புலிகளை ஒடுக்க இராணுவத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்லும் அரசியல் தலைமை தேவை என 'சண்டேரைம்ஸ்' கூறியுள்ளது. அமைச்சரவையில் 75 அமைச்சர்கள் இருந்த போதிலும் அரச தரப்பில் இராணுவத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்ல பாதுகாப்புத் துறைக்கென தனியமைச்சர் ஒருவர் இல்லாமை குறித்தும் ''சண்டேரைம்ஸ்'' பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. பாதுகாப்புத் துறை ஜனாதிபதி விஜேதுங்கவின் பொறுப்பில் தற்போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ விளம்பரம்

### "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்'' நாடகத்தை எழுதித் தயாரித்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்;
1. செட்டிக்காரர்கள்
2. முதலாம்பிள்ளை 30/-.
(6439)

### தவறி விட்டது

06. 11. 93 சனிக்கிழமை இரவு கிளாலி அக்கரையிலிருந்து யாழ்ப்பாணம் இக்கரைக்குவரும் பொழுது உரப்பையால் மூடிக்கட்டப்பட்ட எனது உடுப்பு பாக் (Bag) ஒன்லும், கறுப்பு சிறு கை பாக் ஒன்றும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் விலாசத்தில் அல்லது ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்தில் கையளிக்கவும் கொடுப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். செல்வி கா. சிவகௌரி, மே/பா திரு. ச. கார்த்திகேசு மாதர்சங்கம் ஒழுங்கை, சித்தன்கேணி.
(6577)

### தேடப்பட்டவர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

பல முறைப்பாடுகளின் பேரால் சுன்னாகம் பகுதி காவல்துறையினரால் தேடப்பட்டு வந்த 'ஓல் சிலோன்' என அழைக்கப்படும் ராசன் என்பவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல கொள்ளைச் சம்பவங்களுடனும், அடிதடிகளிலும் தொடர்புபட்டவர் எனக் கூறப்படும் இவர் காவல்துறையினரால் முன்னர் ஒரு தடவை கைது செய்யப்பட்ட போதும் தப்பியோடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் சுன்னாகம் காவல் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

கிளாலிப் பகுதியில் சிறிலங்கா சுப்பர் சொனிக் விமானம் ஒன்று குண்டு வீசித் தாக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

### அறிவித்தல்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் அவை வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் குலுக்கல் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் 15. 11 93 இல் இருந்து 02. 12. 93 (வியாழக்கிழமை) ஆக பிற்போடப் பட்டுள்ளது.

(சி/7934) மாணவர் அவை

### தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
## நம்பிக்கை இல்லம்
## [HOUSE OF HOPE]

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற (Physically Disabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணி பாளர்

ஆதீனர் காரியாலயம், தென்னிந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை
(சி-7918)

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து
## 15-11-93
### செல்வி றேனுஜா குகன்

44/19 சங்கிலியன் வீதியைச் சேர்ந்த குகன் இராஜேஸ்வரி தம்பதியரின் செல்வப்புதல்வி றேனுஜா 15 11 93 இன்று தனது முதலாவது பிறந்த நாளை சங்கிலியன் வீதியில் இருக்கும் தனது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அம்மா, சுவீடனில் வசிக்கும் அப்பா பெரியப்பாமார், பெரியம்மாமார், அம்மம்மா, அக்காமார், அண்ணாமார், தாத்தா, பெரியமாமா, பிரான்சில் வசிக்கும் அன்ரா மாமா மார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அம்மன் முருகன் துணையுடன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றனர்.

44/19, சங்கிலியன் வீதி,
நல்லூர்
(6576)

## 31-ம் நாள் நினைவஞ்சலி
அமரர்
## திரு. பொன். செல்வராசா
அவர்கள்,
(ஆசிரியர், யா/ தம்பசிட்டி மெ. மி. த.க. பாடசாலை.)

ஆசிரியர் அவர்கள் நல்லாசிரியனாகத் திகழ்ந்தது மட்டுமன்றி சமூக சேவைகளிலும் அளப்பரிய பங்காற்றியமை என்றும் எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். எமது நிலைய போட்டிகளில் நடுவராகக் கலந்து கொண்டு ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

## தனிப்பட்ட ஆளுமைகளில் மக்கள் மயங்குவதில்லை
### - திருமதி சந்திரிகா குமாரணதுங்கா

''தனிப்பட்டவர்களின் ஆளுமைக் கவர்ச்சியில் மட்டும் மக்கள் இப்போது மயங்கிவிடுவதில்லை. இது குறித்துநான் மகிழ்ச்சியடைகின்றேன்'' இவ்வாறு மேல்மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க கூறியுள்ளார்.

சண்டே ஐலண்ட் வார இதழுக்கு பேட்டியளித்த அவர் அநுரா வெளியேற்றப்பட்ட தன் பின்னணி பற்றிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது' பெரும்பாலான மக்களும் வாக்காளர்களும் இது எப்பவோ செய்யப்பட்டிருக்க வேண்டியது என்றே அபிப்பிராயப்பட்டனர் பெரும்பாலானவர்கள் இது பற்றிக் கவலைப்படவே இல்லை. குடும்ப பிரச்சினையால் கட்சியின் வளர்ச்சி பாதிக்கப்படுவது பற்றியே அவர்கள் கவலைப்பட்டனர் இப்போது அது தீர்ந்து விட்டது. மக்கள் தனி மனிதர்களின் ஆளுமைக் கவர்ச்சி பற்றிக் கவலைப்படுத்துவதில்லை என்று குறிப்பிட்டார் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில்'பொதுக்கூட்டங்களில் உரை நிகழ்த்துவதும் பகட்டாக நடப்பதும் மட்டும் மக்களுக்கு நன்மை அளித்து விடாது. எனவேதான் எனது அரசியல் வேலைப்பணி வித்தியாசமானது இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும் குடியிருக்க வீடும், மூன்று வேளை உணவும், சமமான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும்' என்பதும் ஜனநாயக உரிமைகளை மக்கள் பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதும் தமது அரசியல் இலக்கு என்று மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## திட்டமிடல் பணிமனைகள் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில்

அபிவிருத்தி இணைப்பு, முன்னேற்றக் கட்டுப்பாடு, நிதி ஒதுக்கீடு முதலான பணிகளைத் திறம்பட ஆற்ற திட்டமிடல் பணிமனைகள் தொடர்ந்தும் மாவட்ட மட்டத்திலே செயற்படும் என்று கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

பொது நிர்வாக அமைச்சும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சும் இணைந்து திட்டமிடல் பிரிவு மாவட்ட மட்டத்தில் செயற்பட வேண்டுமென தீர்மானித்திருப்பதாகவும், 1972ஆம் ஆண்டு முதல் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு திட்டமிடல் பணிமனைகள் உயிரும் உரமும் ஊட்டி வந்திருப்பதாகவும் அவை தொடர்ந்து பேணப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி




தாயின் அரவணைப்பில்
16-09-1962

அரக்கர் அழிப்பில்
21-11-1990

### அமரர் செல்லர் தவராஜா

மூன்றாண்டு சென்றதோ ..
உங்கள் திருமேனி மறைந்ததோ மறைந்ததேயில்லை
நாளும் பொழுதும் ஓடிமறைந்தாலும்
உங்களை நினைக்கும் போதெல்லாம்

## 4-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு
13-06-1955

உதிர்வு
31-10-1989

### அ. ஞானப்பிரகாசம்
(ஞானம்)

எங்கள் அன்பு தெய்வமே அப்பா!
உங்கள் புன்னகை தவழும் இனிய முகம்
எம் கண்களில் தெரிகிறதே எம்மை
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வளர்த்த தெய்வமே அப்பா!
எங்கள் இதயத்தில் என்றும் உங்கள்
நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
(6418)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சதாசிவம் செல்வராணி (லதா)

அன்னைமடியில் 01-03-1974 — அரக்கர் அழிப்பில் 15-11-1990

செல்லமாகப் பெற்றெடுத்து - உனக்கு
செல்வராணியெனப் பெயரிட்டோம்
செல்வங்களை அள்ளித்தந்து - நீ
''செல்'' அடிக்கோ இரையானாய்
ஆண்டுகள் மூன்று சென்றாலும் - எமக்கு
ஆறுதலோ கிட்டவில்லையம்மா - எங்கள்
இன்பதுன்பங்களிலெல்லாம் - இங்கே
ஈர்க்குதம்மா உந்தன்முகம்

அன்பான லதாவே - மைத்துனி
ஆருயிரின் தர்சினியே

பல கொள்ளைச் சம்பவங்களுடனும், அடிதடிகளிலும் தொடர்புபட்டவர் எனக் கூறப்படும் இவர் காவல்துறையினரால் முன்னர் ஒரு தடவை கைது செய்யப்பட்ட போதும் தப்பியோடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் சுன்னாகம் காவல் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

இளாலிப் பகுதியில் சிறிலங்கா சுட்பர் சொனிக் விமானம் ஒன்று குண்டு வீசித் தாக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவகணேசன்- சிறிபவா வயது 18) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது தொழில் நிமித்தம் அங்கு சென்றிருந்த போது குண்டு வீச்சுக்கு இலக்காகி காயமடைய நேரிட்டது.

(யோ)


**COMPUTER**
கல்வி
**DIPLOMA IN BASIC LANGUAGE 4 MONTHS**

செவ்வாய், வியாழன் வகுப்புகள்

ஆரம்பம்: 18-11-93
10-30 மணி

கூடிய செய்முறைப் பயிற்சி
இலவச அச்சடித்த பாடக் குறிப்பு, பயிற்சி முடிவில் சான்றிதழ்.

கட்டணம்:
மாதம் 400/- மட்டுமே

**School of Business Administration**

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS ST.,
JAFFNA.

(சி-7896)


வசிக்கும் அன்பு மாமா மார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அம்மன் முருகன் துணையுடன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றனர்.

44/19, சங்கிலியன் வீதி,
நல்லூர் (6576)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## திரு. பொன். செல்வராசா

அவர்கள்,

(ஆசிரியர், யா/ தம்பசிட்டி மெ. மி. த.க.பாடசாலை.)

ஆசிரியர் அவர்கள் நல்லாசிரியனாகத் திகழ்ந்தது மட்டுமன்றி சமூக சேவைகளிலும் அளப்பரிய பங்காற்றியமை என்றும் எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். எமது நிலைய போட்டிகளில் நடுவராகக் கலந்து கொண்டு ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினருக்கு எமது கிராம மாணவ மணிகள் பெற்றோர், நிலைய உறுப்பினர்கள் சார்பில்**

ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- மேலைப்புலோலி சதாவதானி
கதிரவேற்பிள்ளை
சனசமூக நிலையத்தினர்.

(சி-7936)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
8-5-19..

மறைவு
16-10-1993



அமரர்

## திரு. பொன்னையா செல்வராசா

(ஆசிரியர், யா/தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15-11-1993) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்

அன்னாரது மரணச்சடங்குகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிசெய்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதுடன் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொட்டடிவளவு,
(சாந்தன் வீதி)
அல்வாய் வடக்கு, (சி/7935)

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்



தாயின் அரவணைப்பில்
16-09-1962

அரக்கர் அழிப்பில்
2.-11-1990

## அமரர் செல்லர் தவராஜா

மூன்றாண்டு சென்றதோ..
உங்கள் திருமேனி மறைந்ததோ மறைந்ததேயில்லை
நாளும் பொழுதும் ஓடிமறைந்தாலும்
உங்களை நினைக்கும் போதெல்லாம்
எங்கள் நெஞ்சங்கள் எல்லாம் அனலாய் வெடிக்கிறது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்

உங்கள் பிரிவால் கலங்கி நிற்கும்
**அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணா, அண்ணி, தம்பிமார், மருமக்கள், பெறாமக்கள்**
**உற்றார் உறவினர்**

வயாவிளான் தெற்கு,
வயாவிளான்.

(6580)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி தேவதாஸ் (அன்ரன்) சகாயமேரி (மேரி)

பிறப்பு:
12. 06. 1960

இறப்பு:
16. 10. 1993

''அமலனின் ஒளியாய் விளங்குபவர்கள்
பிரகாசத்தின் பிள்ளையாய் திகழ்வார்கள்''

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15.11 93 திங்கள் காலை 10 00 மணிக்கு புலோலி ஆரோக்கிய மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

''இம்மையில் நேசித்தவர்களே
மறுமையிலும் என்னை மறவாதீர்கள்''

இவர் பிரிவால் துயருறும்
**அன்புக் கணவர், பிள்ளைகள்.**

புலோலி தெற்கு,
புலோலி.

(சி/7933)



## சதாசிவம் செல்வராணி (லதா)

அன்னைமடியில்
01-03-1974

அரக்கர் அழிப்பில்
15-11-1990

செல்லமாகப் பெற்றெடுத்து - உனக்கு
செல்வராணியெனப் பெயரிட்டோம்
செல்வங்களை அள்ளித்தந்து - நீ
''செல்'' அடிக்கோ இரையானாய்
ஆண்டுகள் மூன்று சென்றாலும் - எமக்கு
ஆறுதலோ கிட்டவில்லையம்மா - எங்கள்
இன்பதுன்பங்களிலெல்லாம் - இங்கே
ஈர்க்குதம்மா உந்தன்முகம்

அன்பான லதாவே - மைத்துனி
ஆருயிரின் தர்சினியே
கூடி வாழ்ந்த குடும்பத்தில்
குதூகலித்திருந்தீர்களே - உங்கள் பிரிவு
பன்னிரண்டு மாதங்கள்
ஓடி மறைந்ததென்று - கூறமுடியவில்லை
குமுறுதம்மா இதயமெல்லாம்.

உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப்பிரார்த்திக்கிறோம்.

பலகாடு,
காரைநகர்,

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

(6573)

## நினைவு கூருகின்றோம்... 1993-11-15

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை, விநாயகபுரம் பகுதியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**ரொனி/ஐயர்** (வேலுப்பிள்ளை பூபாலப்பிள்ளை - திருக்கோயில் - அம்பாறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கப்டன் தாரன்** (சண்முகப்பிள்ளை கணபதிப்பிள்ளை- காரைதீவு 03 - அம்பாறை)

அம்பாறை நிந்தவூர், நெ ண்டிச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**ரஞ்சித்** (கந்தக்குட்டி கிருபை - நிந்தவூர் 05-அம்பாறை)

மட்டு - கோரக்கல்மடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுகந்தன்** ( — புஸ்பராஜா - கோரக்கல்மடு, கிரான்- மட்டு)

**ராஜ** ( . - )

1990ஆம் ஆண்டு காரைநகர் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சுபராஜ்** (நவரட்ணம் பரஞ்சோதி - சத்திரந்தை, களபூமி - காரைநகர்)

இதே சம்பவத்தின் போது சிறிலங்காக் கடற்படையினர் பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தை, இளம்பெண் மற்றும் 03 தமிழ்ப் பெண்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு - வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழிளைஞன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/7928)

### சிந்தனைக்கு

வானம் தாளாகி - விண்மீன் ஒவ்வொன்றும் எழுத்தாளனாகி - எழுத்தாளன் ஒவ்வொருவரும் ஏழு கைகள் பெற்றிருந்தாலும் உங்கள் அன்பு அனைத்தையும் எழுத அவற்றினால் முடியாது.

- சுவிஸ் நாட்டின் பழைய பாடல் ஒன்றிலிருந்து

ஈழநாதம்

11, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-11-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2323

த. பெ. எண் - 05

## மக்களுக்காக மரணித்த மகாத்மாக்கள்

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பூநகரி - நாகதேவன் துறை படைத்தளம் மீதான வெற்றிகரமான தாக்குதலில் சுமார் 375 விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். அதாவது, ஒரு மகத்தான வெற்றியின் பின்னால் 375 போராளிகளின் அர்ப்பணிப்பும் தியாகமும் கூடவே உயர்ந்து நிற்கின்றன. அத்தோடு, இவ்வரலாற்றுச் சமரில் நூற்றுக்கணக்கான போராளிகள் இரத்தம் சிந்தியுமுள்ளனர்.

இப் போராளிகளின் தியாகமும், அர்ப்பணிப்புக்களும் எதற்காக? தமிழீழ தேசியஇனவிடுதலைப் போராட்டம் தியாகங்கள் நிறைந்தது. விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்களினாலேயேஇப் போராட்டம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இதில் முதல் மாவீரரான லெப் சங்கரில் இருந்து பூநகரியில் மாவீரரான கடைசிப்போராளி வரையும், தமது இன்னுயிரை அதற்காகத் தற்கொடை செய்துள்ளனர். இதில் ஒவ்வொரு போராளியினதும் பங்கும் மகத்தானது. போற்றுதற்குரியது. இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகத் தமிழ் இனமே பெருமை கொள்ளக் கூடியது.

இப் போராளிகள் யாவரினதும் இலட்சியம தமிழீழ தேசத்தின் விடுதலையே ஆகும். ஆனால், இப் போராளிகள் யாவரும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சூழ்நிலையில், வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள். இந்த வகையில் மண்ணை விடுவிப்பதற்கெனவும், மக்களைப் பாதுகாப்பதற்கெனவும், போராட்டத்தைப் பாதுகாப்பதற்கெனவும் இவர்கள் தம்முயிரைத் தற்கொடைகளாகச் செய்துள்ளனர்.

இந்த வகையில், பூநகரியில் 375 போராளிகள் தமது இன்னுயிரைத் தற்கொடை செய்து கொண்டது1 னது, தமிழ் மக்களின் உயிர்களுக்கு என்றும் அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருந்த இராணுவ - கடற்படை முகாமொன்றை அழித்தொழிப்பதற்காகும். இத் தாக்குதலில் பல இராணுவ ரீதியான அநுகூலங்கள் பெறப்பட்டுள்ள போதிலும், இதன் முக்கியமான இலக்கு தமிழ் மக்களை பலிக் கடாக்களாக ஆக்கி வந்த முகாமை நிர்மூலம் செய்வதே ஆகும்

# பூநகரி முகாம் தகர்ப்பு; புலிகளுக்கு பெருவெற்றி

### சந்தேகப்பட ஏதுமில்லை என்கிறார் ராவய ஆசிரியர்

(கொழும்பு)

''1500 க்கு மேற்பட்ட படையினரைக் கொண்ட பெரிய இராணுவ, கடற்படை கூட்டு முகாமொன்றைத் தகர்த்து தம் வசப்படுத்தக்கூடிய நிலையை இன்று விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர் இது அவர்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றி என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை'' என 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

சந்தேசிய வானொலிக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் கூறுகையில்:

''பூநகரி கடற்படை, இராணுவ தளங்களிலிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் மூலம் புலிகள் தமது கெரில்லா யுக்தியிலிருந்து ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளனர்''

''ஜனகபுர இராணுவ முகாமிலும், பூநகரியிலும் இருந்து பல கனரக ஆயுதங்களை இவர்கள் பெற்றுள்ளனர் இதனால் இன்று பாரிய இராணுவ முகாம்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடாத்தக் கூடிய சக்தியைப் புலிகள் பெற்றுள்ளனர். இதனால் வடக்கில் இராணுவம் பல பின்னடைவுகளைச் சந்திக்க உள்ளது வெளிப்படை''

''புலிகளின் தாக்குதல்களை பார்க்கும்போது யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் குறித்து நம்பிக்கையற்றநிலை தோன்றியிருக்கிறது'' என்றும் குறிப்பிட்டார் அத்துடன் பூநகரி இராணுவ கடற்படை முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலினால் சிறிலங்காவில் விரைவில் ஏற்பட இருந்த தேர்தலுக்கு ஒரு பலத்த பின்னடைவு ஆகும்.

அண்மையில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் கூட விரைவான தேர்தலை மனதில் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது அநுரா பண்டாரநாயக்காவை கட்சியில் சேர்த்துக் கொண்டதும் அவரது திறமை தேய்வடைய முன்னர் தேர்தலுக்கு ஆயத்தப்படுத்தவதற்கும் தமது செல்வாக்கை பலப்படுத்துவதற்கும் சிறிலங்கா அரசாங்கம் தற்போது முயற்சி எடுத்து வருகின்றது என்பது தெளிவாக தெரிகின்றது.

மேலும் பிரதமர் ரணிலின் வேகமான வளர்ச்சியினால் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளராக ரணில் மாறலாம் என்ற ஐயப்பாட்டை மக்களிடம் தோற்றுவித்துள்ளது. இந்தச் சமயத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் டி. பி. விஜேதுங்காவே என்று எந்த ஒரு எதிர்ப்புமின்றி ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு முடிவு எடுத்தது வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்தம் புதியதொரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. என்றும் தெரிவித்தார்.

## திருமதி சிறிமாவின் கூற்று மோசமானயுத்த அறைகூவல்

### பத்திரிகையாளர் கருத்து

(கொழும்பு)

டி. பி. விஜேதுங்கவின் அரசை விடவும் மிக மோசமான யுத்த அறைகூவலை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவே விடுத்துள்ளார். பூநகரி இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து இவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பது வருந்தத்தக்கது என்று திவயின பத்திரிகையாளர் சயா லங்காபுவத்திற்கு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிடுகையில் அரசியல் தீர்வு தொடர்பாக எதிர்க்கட்சிகள் பேசிக் கொள்கின்றபோதும் அடுத்த பக்கத்தில் யுத்தத்தில் நம்பிக்கை கொண்டு செயற்படுவதையே இது காட்டுகின்றது. பூநகரிமுகாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதைக் கண்டித்துதிருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்து இத்தகையதே என்றார்.

## சிங்கள பௌத்த இனவாதத்தினாலே நாட்டுக்கு இந்த நிலை ஏற்பட்டது

- வாசுதேவ நாணாயக்கார

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுதந்திரமான தீர்மானம் எடுக்கும் முடிவை இனவாதிகள் மழுங்கடித்தமையினால் தான் இன்று ஒரு துன்பமான நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நவ சம சமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்

நாம் சிங்கள பௌத்தர்கள் எனத் தம்பட்டம் அடித்தவர்களால் தான் இந்த நிலைநாட்டுக்கு ஏற்பட்டது. இன்று ஏற்படும் உயிரிழப்பு யாவற்றுக்கும் காரணகர்த்தாக்கள் அவர்கள் தான் எனவே இனியாவது காலம் தாழ்த்தாது, இனவாதத்தை கிளறாமல் இத் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முன் வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

## பழைய நம்பிக்கைகள் நீடித்தால் தீர்வு காணமுடியாது

— காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

பழைய நம்பிக்கைகளே தொடர்ந்தும் நீடித்தால் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பது என்பது முடியாத

பட வேண்டும்.

கடந்தநாற்பதுவருடகாலமாக தமிழ்மக்களுக்கும் - சிங்களமக்களுக்கும் இடையேயான உறவுகள் அகலமடைந்து இன்று இத்தகைய மிக மோசமான

### ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

புலோலி கிராமிய வங்கியில் ஓய்வூதியர்களதுபடிகள்நேற்று முன்தினம் வரை வழங்கப்படவில்லை ஒருவாரம் முன்னதாக ஓய்வூதிய வவுச்சர்கள் செயலகம் வந்த போதிலும் செயலகத்திலிருந்து இவ்வங்கிக்கு 'செடூல்' அனுப்பிவைக்கப்படாததினால் ஓய்வூதியம்

எது சட்ட விரோதம்?

## ஐலண்ட் ஆசிரியர் சி. ஐ. டி முரண்பாடு

(கொழும்பு)

ஹலோ: ஹலோ: 448 தானே ஐலண்ட் ஆசிரியர் உள்ளாரா? இது சி. ஐ. டியின் தொலைபேசி அழைப்பு

உங்கள் தொலைபேசி பாரிசிலுள்ள விடுதலைப்புலிகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதற்காக பயன்படுத்தப்படும் செய்தி கிடைத்துள்ளது.

ஐலண்ட் ஆசிரியர்: இத்தொலைபேசி பலரால் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படாவிட்டால் இங்கிருந்து பாரிசுக்கு விடுதலைப் புலிகளுடன் ஒருவரால் தொடர்பு கொள்ளப்பட்டது பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?

சி. ஐ. டி அதிகாரி: நீங்கள்தான் தொடர்பு கொண்டு பேசினீர்கள் எனக் கூறவில்லை. ஆனால் உங்கள் தொலைபேசி சிலரால் இத்தொடர்பிற்காகப் பயன்படுத்தபபட்டுள்ளது என்ன பேசப்பட்டது என்பதை நாம் அறிவோம் சில பாரதூரமானவை.

ஐலண்ட் ஆசிரியர்; அப்படியானால் தொலைபேசி ஒற்றுக் கேட்கப்படுகின்றது. இல்லாவிட்டால் எப்படி உங்களால் தெரிந்து கொள்ள முடியும்... இது சட்டத்திற்குப் புறம்பானது அல்லவா?

சி. ஐ. டி. அதிகாரி: ஆனால் புலிகளுடன் பேசுவது கூட சட்டத்திற்குப் புறம்பானதுதானே.

ஐலண்ட் ஆசிரியர்: இல்லை. திரு. பிரேமதாசா கூட புலிகளுடன் பேசியிருக்கும் போது சாதாரண ஒரு பத்திரிகையாளர்...

சி. ஐ. டி அதிகாரி: இந்தத் தகவலை நாங்கள் சில ஆவணங்கள் மூலம் பெற்றுள்ளோம் அதை உறுதிப்படுத்தவே கேட்டோம்...

ஐலண்ட் ஆசிரியர்: அப்படியானால் அலுவலகத்திற்கு நேரில் வரலாமே?

## அநுரா இருப்பதால் நீங்கள் 'பொலிடோல்' குடிக்க நேரலாம்

### பாராளுமன்றத்தில் சு. க எம். பி

[கொழும்பு]

'நாங்கள் நான்கு வருடங்கள் பனடோல் குடித்தோம். நீங்கள் இனி பொலிடோல் குடிக்கவேண்டி வரும்'' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ்பெர்ணாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அநுரா பண்டாரநாயக்கா பற்றிய ஐ. தே. கட்சியினரின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் அநுரா பண்டாரநாயகாவிற்கு பயப்படவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாருடைய தயவிலும் இல்லை' எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்

## ஐ. தே. கவினுள் குழிபறிப்பு

### தகவல்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழிபறிப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாக தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே ரணசிங்கா கூறியுள்ளார்.

வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்படுவதற்கு

வுக்கு வந்துள்ளது. டி. எஸ். சேனநாயக்காவோ, டட்லி சேனநாயக்காவோ அல்லது அவர்களின் பின்பு பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவோ, பிரேமதாசவோ ஒரு பிரதித்தலைவரைகொண்டிருக்கவில்லை. ஜனாதிபதியும் ஐ தே கட்சி தலைவருமான

தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகத் தமிழ் இனமே பெருமை கொள்ளக் கூடியது.

இப் போராளிகள் யாவரினதும் இலட்சியம் தமிழீழ தேசத்தின் விடுதலையே ஆகும். ஆனால், இப்போராளிகள் யாவரும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சூழ்நிலையில், வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள். இந்த வகையில் மண்ணை விடுவிப்பதற்கெனவும், மக்களைப் பாதுகாப்பதற்கெனவும், போராட்டத்தைப் பாதுகாப்பதற்கெனவும் இவர்கள் தம்முயிரைத் தற்கொடைகளாகச் செய்துள்ளனர்.

இந்த வகையில், பூநகரியில் 375 போராளிகள் தமது இன்னுயிரைத் தற்கொடை செய்து கொண்டதானது, தமிழ் மக்களின் உயிர்களுக்கு என்றும் அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருந்த இராணுவ - கடற்படை முகாமொன்றை அழித்தொழிப்பதற்காகும். இத் தாக்குதலில் பல இராணுவ ரீதியான அநுகூலங்கள் பெறப்பட்டுள்ள போதிலும், இதன் முக்கியமான இலக்கு தமிழ் மக்களை பலிக் கடாக்களாக ஆக்கி வந்த முகாமை நிர்மூலம் செய்வதே ஆகும்

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத் தளத்தில் இருந்த படையினர் இதுவரையில் கிளாலிக் கடற்பரப்பில் மேற்கொண்ட மிருகத்தனமான தாக்குதல் மூலம் பலநூற்றுக்கணக்கான அப்பாவிப்பொதுமக்களை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்துள்ளனர். அதாவது இம் முகாமின் பிரதான குறிக்கோள்களில் ஒன்று கிளாலியைக் கடக்க முற்படும் தமிழ் மக்களைக் கொன்று தீர்ப்பதே ஆகும்.

இந்த நிலையில் பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் கேந்திர முக்கியத்துவம் என்பதற்கும் அப்பால், தமிழ் மக்களின் பாதுகாப்புடன்நேரடித்தொடர்புபட்டதாக, அடிக்கடி அவர்களுக்குஅபாயம்விளைவிப்பது ஒன்றாகவும இருந்து வந்துள்ளது. இவ் இராணுவ முகாம் யாழ். குடாநாட்டு முற்றுகைக்கு என அமைக்கப்பட்ட போதும் இதனால் முற்றுகை சாத்தியமாகவில்லை. ஆனால், கிளாலிக் கடலில் படுகொலைகளே சாத்தியமாகியது.

இந் நிலையில், இம் முகாமை தாக்கி அழித்தலென்பதும், நிர்மூலமாக்குவதென்பதும் தமிழ் மக்களின் பாதுகாப்புடன் நேரடித் தொடர்பு பட்டதாக இருந்தது. இத் தாக்குதலுக்கு முன்னரும். இத்தளத்தைச் சேர்ந்த படையினருக்கு எதிராக கடற்புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ள போதிலும், மக்களின் பாதுகாப்பிற்கென பலமான ஒரு அடியைக் கொடுக்க வேண்டியது அவசியமாகவே இருந்தது.

இதன் காரணமாகத்தான் இம் முகாம் மீதான பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இத் தாக்குதலில் நூற்றுக்கணக்கான போராளிகள் தமது உயிரைத் தற்கொடை செய்ய வேண்டிய நிலை உருவாகும் என்பதோ, நூற்றுக்கணக்கானோர் காயங்களுக்கு உள்ளாக வேண்டி வரும் என்பதோ எவரும் அநுமானிக்க முடியாததொன்றல்ல. இருப்பினும், இம் முகாம் மீது தாக்குதல் குறித்த முடிவானது எவ்விழப்புவரினும் தமிழ் மக்களின் பாதுகாப்பு, நலன் என்பதின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதே ஆகும்.

அதாவது, பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய 375 போராளிகளும் தமது மக்களின் பாதுகாப்பிற்காக தமது உயிரைத் தற்கொடை செய்தவர்கள் என்பதே சரியானதாகும். இந் நிலையில் இப்போராளிகளின் உயிர்கள் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட அர்ப்பணிப்புக்கள் ஆகும். உலகில் எதற்கும் ஈடாகாத் தம் உயிரைத் தமது மக்களின் பாதுகாப்பிற்காக இப்போராளிகள் தற்கொடை செய்துள்ளார்கள். இது அவர்கள் தமிழ் மக்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகும், இவர்கள் மக்களுக்காக மரணித்த மகாத்மாக்கள்.

---

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுதந்திரமான தீர்மானம் எடுக்கும் முறைவை இனவாதிகள் மழுங்கடித்தமையினால் தான் இன்று ஒரு துன்பமான நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நவ சம சமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்

நாம் சிங்கள பெளத்தர்கள் எனத் தம்பட்டம் அடித்தவர்களால் தான் இந்த நிலைநாட்டுக்கு ஏற்பட்டது. இன்று ஏற்படும் உயிரிழப்பு யாவற்றுக்கும் காரணகர்த்தாக்கள் அவர்கள் தான் எனவே இனியாவது காலம் தாழ்த்தாது, இனவாதத்தை கிளறாமல் இத் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முன் வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

---

...திபதி வேட்பாளர் டி. பி. விஜேதுங்காவே என்று எந்த ஒரு எதிர்ப்புமின்றி ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு முடிவு எடுத்தது வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்தம் புதியதொரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. என்றும் தெரிவித்தார்.

---

'நாங்கள் நான்கு வருடங்கள் பனடோல் குடித்தோம். நீங்கள் இனி பொலிடோல் குடிக்கவேண்டி வரும்'' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ்பெர்ணாண்டோபுள்ளே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அநுரா பண்டாரநாயக்கா கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'நாம் அநுரா பண்டாரநாயக்காவிற்கு பயப்படவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாருடைய தயவிலும் இல்லை' எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

---

## பழைய நம்பிக்கைகள் நீடித்தால் தீர்வு காணமுடியாது

– காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

பழைய நம்பிக்கைகளே தொடர்ந்தும் நீடித்தால் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பது என்பது முடியாத விடயமாகவே அமையும். இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

பூநகரி யுத்த நடவடிக்கை தொடர்பாக பி. பி. ஸியின் சந்தேசிய சிங்கள ஒலிபரப்பிற்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் அதிகாரப் பரவலாக்கம், சமஷ்டித்தீர்வு என்பவை தொடர்பான பழைய நம்பிக்கைகளும் தவறான கருத்துக்களும் நீக்கப்பட வேண்டும்.

கடந்தநாற்பதுவருடகாலமாக தமிழ்மக்களுக்கும் - சிங்களமக்களுக்கும் இடையேயான உறவுகள் அகலமடைந்து இன்று இத்தகைய மிக மோசமான நிலைக்கு வந்துள்ளது தமிழர்களின் தேவைகளை சிங்கள அரசியல் வாதிகள் தமது நலனுக்காக மறந்து செயல்பட்டனர். இதன் பிரதி உபகாரத்தையே இன்று நாம் அனுபவிக்கின்றோம். அவர்களுக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுப்பதற்கு நாம் யோசித்ததால் இன்று அம் மக்கள் எங்களைவிட்டுஅகன்றுசென்றுவிட்டனர் எனவும் அவர்குறிப்பிட்டார்.

---

### ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

புலோலி கிராமிய வங்கியில் ஓய்வூதியர்களதுபடிகள்நேற்று முன்தினம் வரை வழங்கப்படவில்லை ஒருவாரம் முன்னதாக ஓய்வூதிய வவுச்சர்கள் செயலகம் வந்த போதிலும் செயலகத்திலிருந்து இவ்வங்கிக்கு 'செடூல்' அனுப்பிவைக்கப்படாததினால் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை

புலோலி கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லையேயென ஏமாந்த நிலையில் திரும்பிச் சென்றனர். (யோ)

### பிற்போடப்பட்டது

பலாலி ஆசிரியர் கலாசாலையில் இன்று நடைபெறவிருந்த 'ஒளிவிழா' பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

---

## ஐ. தே. கவினுள் குழிபறிப்பு தகவல்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழிபறிப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாக தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா கூறியுள்ளார்.

வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்படுவதற்கு முன்பாக சண்டே ரைம்ஸ் இதழுக்குபேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்; எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும், ஜோன் கொத்தலாவலைக்கும் இடையே முரண்பாடுகளை பலப்படுத்தி டி. எஸ். சேனநாயக்கா தொடக்கிவைத்த இவ் விளையாட்டு இப்போதுதான் முடிவுக்கு வந்துள்ளது. டி. எஸ். சேனநாயக்காவோ, டட்லி சேனநாயக்காவோ அல்லது அவர்களின் பின்பு பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவோ, பிரேமதாசவோ ஒரு பிரதித்தலைவரைகொண்டிருக்கவில்லை. ஜனாதிபதியும் ஐ. தே. கட்சி தலைவருமான டி. பி. விஜேதுங்க தமது காலத்தில் ரணில் விக்கிரமசிங்காவை பிரதித் தலைவராகவும், விஜேபால மெண்டிசை சபை முதல்வராகவும் நியமித்ததன் மூலம் போட்டியுணர்வுகள் தளிர்க்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

---

## பருக் அகமட் லகாரி பாக். ஜனாதிபதியாக தெரிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதியாக சர்தார் பருக் அகமட் கான் லகாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியின் கூட்டு வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்ட இவர் நேற்று நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். தற்காலிக அதிபராக இருந்தவரும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாப்) வேட்பாளருமான வாஸிம் சையததை நேரடிப் போட்டியில் 273க்கு 167 என்ற வாக்கு வித்தியாசத்தில் லகாரி தோற்கடித்தார் 53 வயதாகும் லகாரியின் வெற்றியினால் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் செல்வாக்கு மேலும் வலுப்பெறும் என்று கூறப்படுகிறது.

---

### பாதுகாப்பு நடவடிக்கை

(டில்லி)

சிறிலங்கா கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இந்திய பிரதமர் திரு நரசிம்மராவ் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

### 95 ஆக உயர்வு

(சென்னை)

தமிழ்நாட்டில் பெருமழை காரணமாக வீடுகள் இடிந்து விழுந்ததாலும் நிலச் சரிவுகளாலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 95 ஆக உயர்ந்துள்ளது.

நீலகிரி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் பெய்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவினால் மட்டும் இருபத்தைந்து பேர் உயிரிழந்து உள்ளனர். 103 பேர் காயமடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் இந்தியக்கடற்படையின் இரண்டு உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

---

## ஐ.தே.கவில் சேர்வதற்காக ஹேமா விண்ணப்பிக்கவில்லை

– சிறிசேன கூரே

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருந்தபோது ஒஸி அபயகுணசேகர முக்கியத்துவம் பெற்றிருந்தது போல இப்போது அவரது நிலை காணப்படவில்லை இது ஐ.தே.க அவரைக் கைவிட்டு விட்டது போன்று காணப்படுகிறதே என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயிடம் கேட்கப்பட்ட போது 'ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக்காலத்தின் போது ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலைகள் மிக ஆடம்பரமாகத் திறந்து வைக்கப்பட்டன. அப்போது ஒஸியும் அவருடன் கூடச்சென்று வந்தார் இப்போது ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலைகள் அத்தகைய ஆடம்பரத்துடன் திறந்து வைக்கப்படுவதில்லை. அந்த விகிதத்தில் பார்த்தால் ஒஸியின்முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை'' எனப் பதிலளித்தார்.

சண்டே ஐலண்டிற்கு பேட்டியளித்த அவர் ஐ தே. கவுடன் காமினிதிசாநாயக்கா ஏன் இணையவில்லை என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், அவர் தமது கட்சியிலிருந்து விலகி ஐ தே.கவில் சேருவதற்கு விண்ணப்பிக்கவில்லை எனப் பதிலளித்தார்.

தமது கட்சியைக் கலைத்து விட்டு ஐ.தே.கவுடன் சேர்ந்த ருக்மன் சேனநாயக்காவிற்கு பதவி எதுவும் வழங்கப்படாதது ஏன் என்று கேட்டபோது அவர் நியமன உறுப்பினராகப் பாராளுமன்றம் வர விரும்பவில்லை என்று சிறிசேனகூரே குறிப்பிட்டார்.

திருமதி ஹேமா பிரேமதாசா மற்றும் சஜித் பிரேமதாசா போன்றோர் ஐ தே.கவில் சேர்வதற்காக இன்னமும் விண்ணப்பிக்கவில்லை என்று மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் சிறிசேன கூரே தெரிவித்தார் முறைப்படியாக விண்ணப்பிக்கும் எவரையும் ஐ. தே. க சேர்த்துக் கொள்ளும் என்றும் அவர் மேலும் விளக்கினார்.

---

## இஸ்ரேலுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்

பில் கிளிண்டன் உறுதி

(வாசிங்டன்)

இஸ்ரேலுக்கான பொருளாதார மற்றும் இராணுவ உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் உறுதி அளித்துள்ளார்.

மத்திய கிழக்கு பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதில் வாசிங்டன் தனது பங்கை தொடர்ந்து ஆற்றும் என்று வாசிங்டனில் தன்னை சந்தித்துப் பேசிய இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீனிடம் தெரிவித்ததாக செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்

அண்மையில் செய்துகொள்ளப்பட்ட பாலத்தீனிய - இஸ்ரேலிய உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பாக வாசிங்டன் இஸ்ரேலுக்கு உதவும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரதான இயக்கமான அல்பத்தா அதன் தலைவர் யாசிர் அரபாத் தலைமையில் அவசரக் கூட்டமொன்றை நடத்தவுள்ளது. இதன் தலைமையகத்தில் இஸ்ரேலிய உளவாளிகள் கண்டு பிடிக்கப்பட்ட விடயம் தொடர்பாகவே இங்கு கலந்துரையாடப்பட இருப்பதாக கூறப்படுகின்றது.

---

### திருட்டு பிடிபட்டது

(தென்மராட்சி)

அண்மையில் கிளாலிப் பகுதியில் உள்ள பெதேஸ் — அமலதாஸ் என்பவரது வீட்டில் 24 பவுண் நகையினை இரவு நேரம் களவாடிச் சென்றதாக சந்தேக நபர் ஒருவரை பிடித்து பளை காவல் துறையினர் விசாரணைக்குஉட்படுத்தியபோது களவு அம்பலமாகியது அத்துடன்களவாடிய பவுணில்3 பவுண்வரை இல்லாமல் மிகுதி யாவும் பளை காவல் துறையினரால் கைப்பற்றப் பட்டது இக் கள்வரை காவல் துறையினர் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். 86)

# தி. மு. க. தலைவர் கருணாநிதியை வெளியேற்ற வை. கோ. முயற்சி

(சென்னை)

தி. மு. க பொதுக்குழுவில் உள்ள மொத்த 800 உறுப்பினர்களில் இதுவரை 500க்கும் மேற்பட்டவர்கள் வை. கோபாலசாமிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கோபாலசாமியை கட்சியிலிருந்து நீக்குவதை தி. மு. க வழக்கறிஞர் சங்கம் கண்டித்துள்ளது.

மேலும் வை கோபாலசாமி ஆதரவாளர்கள் நான்கு தினங்களின் முன்னர் திருச்சியில் பெருங் கூட்டம் ஒன்றை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் தி. மு க மாவட்டச் செயலர்களில் பத்துப் பேர் பங்குபற்றினர். இதில் கட்சியின் பொதுக்கூட்டத்தை கூட்டுவது என முடிவு செய்யப்பட்டது. வை. கோபாலசாமியை கட்சியிலிருந்து நீக்கியது செல்லாது என அறிவிக்கவும், கருணாநிதியை கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அதற்கு கோபாலசாமியை தெரிவு செய்யவும் பொதுக்குழுவில் தம்மால் போதுமான அளவு ஆதரவை திரட்டமுடியும் என திருச்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன், மகன் ஸ்ராலின், அழகிரி ஆகியோரை கட்சியைவிட்டு நீக்கினாலே சமரசப் பேச்சு என கோபாலசாமி ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இதே சமயம் கோபாலசாமியின் ஆதரவாளர்கள் கட்சியின் தலைமைப் பீடமான அண்ணா அறிவாலயத்தை கைப்பற்றாமல் தடுக்க அங்கு ஆயுதம் தாங்கிய தனது சொந்த காவலர்களை தி. மு க நிறுத்தியுள்ளது.

யாகப்பர் ஆலயம்

## இருத்த வேலைகளுக்கு 40 மில். ரூபா தேவை!

சிறிலங்கா விமானப் படையினரின் சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்களின் குண்டுத்தாக்குதல்களால் சேதமடைந்த புனித யாகப்பர் ஆலயத்தை மீள அமைத்துக் கொள்வதற்கு சுமார் நாற்பது மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் தேவைப்படும் என்று அண்ணளவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அண்ணளவான மதிப்பீடு குறித்து மேற்படி ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்திரு. நேசநாயகம் கருத்துத் தெரிவிக்கையில்; வரலாற்றுச் சிறப்பு மிக்கஇந்த ஆலயத்தை மீண்டும் இதே அமைப்பில் அமைத்துக் கொள்வதற்கு எத்தனை மில்லியன் பணம் இருந்தாலும் முடியாத காரியம் என்று தெரிவித்தார். சுமார் 132 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் பக்தர்கள் மீது சிறிலங்காப் படையினர் இதற்கு முன்னரும் ஒரு தடவை தாக்குதல் நடத்தியுள்ளனர் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் விழாவுக்காக இவ் ஆலயத்தில் மக்கள் கூடியிருந்த சமயம் ஆலயத்துக்குள் நுழைந்த சிறிலங்கா பொலிஸ் படையினர் பக்தர்கள் மீது தாக்குதல் நடாத்தினர் இக் காலத்தில் பங்குத் தந்தையாக அருட்திரு பெனட் அவர்கள் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

---

## கண்ணீர் அஞ்சலி
## வீரவேங்கை வசந்தி (மைனா)

பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவு அடைந்த, வணிகநெறி ஆசிரிய மாணவி உண்ணாப்பிலவு முல்லைத்தீவு செல்லையா யோகராணியின் அன்புச் சகோதரி வசந்தி (மைனா)க்கும் ஏனைய மாவீரருக்கும் எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வணிகநெறி ஆசிரிய மாணவர்.

பலாலி ஆசிரிய கலாசாலை (6582)

---

## மரண அறிவித்தல்கள்

### திரு. A. S. மார்க்கண்டு
[சினிமாஸ் லிமிட்டெட் கணக்காளர்]

நீர்வேலியை பிறப்பிடமாகவும் இல. 4 மேதர்ஸ் லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட A. S மார்க்கண்டு 13 11 1993 இல் சிவபதமடைந்தார். அன்னார் திரு. திருமதி சண்முகம் சின்னராசிப்பிள்ளை

---

விநியோகம்

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் சைவினை ஆ கழக ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை பெறத்தவறிய பகல், மாலை நேர மாணவர்கள் எதிர்வரும் புதன்கிழமை காலை பதினொருமணிமுதல், பிற்பகல் ஒரு மணிவரை மாணவர வ அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (07)

ஒத்திவைக்கப்பட்டது

தமிழ்த்தாய்மன்றத்தினரின் மாற்றம் சஞ்சிகையினரால் யாழ்கன்னியர் மடம், நல்லிக்னேஸ்வரா வித்தியாலயம், திரு/முத்துத்தம்பி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நாளை நடாத்தப்படவிருந்த துரித தமிழ்ப்பயிற்சி நெறிப் பரீட்சைபோர்க்காலசூழ் நிலை கருதி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது

# சுன்னாகத்தில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

பூநகரிப் பகுதியில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு உடன் 30வீர வேங்கைகளின் வித்துடல்கள், நேற்று மாலை 3. 45 மணி முதல் சுன்னாகம் சந்தைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தன. சுன்னாகம் சந்தைப் பகுதி முழுவதும், சிவப்பு. மஞ்சள் நிறக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஆயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சி மேலிட, கதறியழுது தங்கள் இறுதி அஞ்சலிகளை வீரவேங்கைகளுக்கு செலுத்தினர். அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது கூட்டத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், விடுதலைப் புலிகள் மகளிரமைப்பின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் செல்வி. தணிகைச் செல்வி, மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோர் உரையாற்றினர்.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து முல்லை சிறப்புத் தளபதி அன்பு அவர்களின் வித்துடலைத் தவிர்ந்த, வீர வேங்கைகளின் வித்துடல்கள், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விதைக்கப்பட்டன. மாவீரர்களின் இறுதி ஊர்வலம் சென்ற பாதையெங்கும் பெருந்திரளான மக்கள் திரண்டு நின்று மலரஞ்சலி செலுத்தினர். (11) (09)

# திட்டமிட்ட இலக்கை புலிகள் அடைந்துவிட்டனர்

## பூநகரி தாக்குதல் குறித்து கிறிஸ்மொறிஸ்

(லண்டன்)

விடுதலைப் புலிகள் எதனைத் திட்டமிட்டனரோ அதனை அவர்கள் அடைந்துவிட்டனர். கடற்படைத் தளம் நிலையம் அழிக்கப்பட்டுவிட்டது பல மாதங்களுக்கு தேவையான ஆயுதங்களையும் அவர்கள் எடுத்துள்ளனர். எனவே அங்கு தங்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என அவர்கள் நம்புகின்றனர். இவ்வாறு பி. பி ஸியின் முன்னாள் கொழும்பு முகவர் கிறிஸ்மொறிஸ் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; பல ஆயுதங்கள் புலிகளின் கைக்கு சென்றமை குறித்து கொழும்பில் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். புலிகளிடம் 5 மைல் பாயும் ஆட்லறிகளும் கிடைத்துள்ளன. புலிகள் பொதுவாக துப்பாக்கிகள், ரொக்கட் ஏவாயுதங்கள் என்பவற்றுடன் குறுகிய இடைவெளியில் நின்று எதிரியை சந்திப்பர் அவர்களிடம் கனரக வாகனம் இருந்ததில்லை. கூடுதல் தாக்குதல்திறன் வாய்ந்த ஆயுதங்களும் அவர்களிடம் இருந்ததில்லை

புதிய ஆட்லறிகள் மூலம் ஏற்கனவே புலிகளின் பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் இதுபோரின் போக்கை குறிப்பிடத்தக்களவு மாற்றலாம். ஏனெனில் இவ்வளவு காலமும் இராணுவ முகாம்கள் பாதுகாப்பாக இருந்தன. எனினும் அவை ஆட்லறி தாக்குதலுக்கு இலக்காகலாம் என்றும கிறிஸ்மொறிஸ் மேலும் கூறினார்.

## 168 சிப்பாய்களின் சடலம் கிளிநொச்சியில் தகனம்

[கிளிநொச்சி]

பூநகரி, நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது பலியாகிய சிறிலங்கா இராணுவத்தினரின் சுமார் 168 சடலங்கள் நேற்று இரவு கிளிநொச்சியில் தகனம் செய்யப்பட இருந்தது.

இச் சடலங்களை தாம் ஏற்றுக் கொள்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சிறிலங்கா அரசு அறிவித்திருந்தது. நேற்றுக்காலை 10 மணியளவில் இவ் அறிவித்தல் வெளியாகியது. பின்னர் 11-00 மணியளவில் இச் சடலங்களை ஏற்க முடியாது என்று அரசு அறிவித்ததாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் தெரிவித்தனர் இதைத் தொடர்ந்துஇச் சடலங்களை தகனம் செய்வதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. தகனம் செய்வதற்கு முன்னர் கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட வைத்திய அதிகாரியும் இச் சடலங்களைப் பார்வையிட்டனர்.

## பூநகரி முகாம் தகர்ப்பில் ஹமில்டனின் உறவினர் பலி

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பின் போது கொல்லப்பட்ட பெருந்தொகையான படையினருள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் உறவினர் ஒருவரும் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஹமில்டனின் சகோதரியின் மகனான மேஜர் பந்துல வனசிங்கவே கொல்லப்பட்டவராவார் ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையின் போதும் ஹமில்டன் வனசிங்கவின் நெருங்கிய உறவினர் ஒருவர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சியில் குணாவிற்கு அஞ்சலி

பூநகரி முகாம் தகர்ப்பு சமரில் வீரச்சாவு அடைந்த தென்மராட்சிசிறப்புப்பொறுப்பாளர் குணாவின் வித்துடல் நேற்றுக்காலை 10. 00 மணியளவில் கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது குணாவின் வித்துடலுக்கு பெருமளவு மக்கள் திரண்டு வந்து தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்

இதனை தொடர்ந்து நிகழ்ந்த வீரவணக்க கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன்தியாகம், தேவர், யாழ்மாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழிஉட்பட பலர் அஞ்சலி உரையாற்றினர்.

குணாவின் வித்துடல் வீரவணக்க கூட்டத்தை தொடர்ந்து விடுதலைப்புலிகள் பாண்ட் வாத்தியக் குழுவின் அணிவகுப்புடனும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பாண்ட் வாத்திய அணிவகுப்புடனும் ஊர்வலமாக கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விதைக்கப்பட்டது. வீதியின் இருமருங்கும் திரண்டிருந்த மக்கள் கதறியழுதவாறு அஞ்சலியை செலுத்தினர்.

---

கடற்

பி ப. 4 00 மணிக்கு புத்தூர் மாவீரர் மண்டபத்தை வந்தடையும். அங்கு அஞ்சலிக்கூட்டம் நடாத்தப்படடு அதன் பின்னர் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு வந்தடைந்து துயிலுமில்லத்தில் கடற்கரும் புலி மேஜர்கணேசுக்கு நினைவுக்கல் நாட்டப்படும்.

---

பூநகரி முகாம்

தெளிவான பதிலைச் சொல்ல முடியாத நிலையில் இராணுவ அதிகாரிகள் இருப்பதால்பெற்றோரும உறவினரும் மிகவும் கோபம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட, காயமடை

---

ஜனாதிபதி

கவும் ஒத்துழைப்பு நல்குவதாகவும் தெரிவிக்கப்படும் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது இதன்போது ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேறியது.

இதைத் தொடர்ந்து செயற்குழு கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி விஜேதுங்க வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்க அனைவரும் முன்வரவேண்டும் எனவும் அங்கு நிகழ்வது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினையே எனவும் கூறினார்.

---

25 கோடி

புர இராணுவ முகாமின் மீது புலிகள் நடத்திய தாக்குதலிலும் இதே கதைதான். புலிகள் படையினரிடமிருந்துகைப்பற்றிய ஆயுதங்களை கொண்டு அந்த ஆயுதபலம் மூலம் படையினரை தாக்குகின்றனர் என்பதையே இத் தாக்குதல் காட்டுகின்றது. நெடுந்தூரம் சென்று தாக்கும் ஆயுதம் கைப்ப

வணிகநெறி ஆசிரிய மாணவி உண்ணாப்பிலவு முல்லைத்தீவு செல்லையா யோகராணியின் அன்புச் சகோதரி வசந்தி (மைனா)க்கும் ஏனைய மாவீரருக்கும் எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வணிகநெறி ஆசிரிய மாணவர்.

பலாலி ஆசிரிய கலாசாலை (6582)

# மரண அறிவித்தல்கள்

## திரு. A. S. மார்க்கண்டு

**[சினிமாஸ் லிமிட்டெட் கணக்காளர்]**

நீர்வேலியை பிறப்பிடமாகவும் இல. 4 மேதர்ஸ் லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட A. S மார்க்கண்டு 13 11 1993 இல் சிவபதமடைந்தார். அன்னார் திரு. திருமதி சண்முகம் சின்னாசிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சுகிர்தமலரின் அன்புக் கணவரும், A. S M. சிறிதரன் J.P. (நியூ விமாகி VEMAKI நிறுவனம் யாழ்ப்பாணம், Venke ImPex நிறுவனம் கொழும்பு ஆகியவற்றின் உரிமையாளரும்) அவர்களின் அன்புத் தந்தையும், கலாரோகினியின் அன்பு மாமனாரும், திரு. குமாரசாமி மாஸ்டர் நீர்வேலி, காலஞ்சென்ற திருமதி ஆறுமுகம் சனகம்மா அவர்களது அன்பு சகோதரருமாவார். திருமதி குமாரசாமி அன்னலச்சுமியின் மைத்துனருமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்று மாலை 3. 00 மணிக்கு ஈமக்கிரிகைகள் நடைபெற்று பிப்பிலி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்

தகவல்:
A. S. M. சிறிதரன்
(மகன்)

(6578)

## மேஜர் விக்கி

**[சண்முகநாதன் விக்கினேஸ்வரன்]**

இவர் சண்முகநாதன் தங்கம்மாவின் அன்பு மகனும், பரமேஸ்வரன் (ஈசன்) வர்த்தகர். சத்தியேஸ்வரி(சுவிஸ்), புராதனி மாணவி யாழ் தொழில் நுட்பக் கல்லூரி, பாலேந்திரன் மாணவன் யாழ் மத்திய கல்லூரி, கௌசலியா மாணவி யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ப. கமலாதேவி, மு திருச்செல்வம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வராகி (சுவிஸ்) பாசமிகு ஆசைமாமாவும், கனகம்மாவின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் வித்துடல் (13-11-93) சனிக்கிழமை கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புதைகுழியில் விதைக்கப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பலாலி வீதி,
கந்தர்மடம்.

சி. நா. சண்முகநாதன்
(தகப்பன்)
சுகபாணி ஸ்ரோர்ஸ்

[6581]

## வீரவேங்கை ஜசோக்கணேஸ்

கோட்டையில் வீரச்சாவடைந்த கப்டன் ஜசோதராவின் தம்பி ஜசோக்கணேஸ் பூநகரிச் சமரில் வீரச்சாவை தழுவிக்கொண்டார். இவரது உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள் இவ் வீரச்சாவு அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரி யசோ.

''ஜசோ இல்லம்''
நாவலர் வீதி,
ஐந்துசந்தி (696), யாழ்ப்பாணம். (6583)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பல ஆயுதங்கள் புலிகளின் கைக்கு சென்றமை குறித்து கொழும்பில் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். புலிகளிடம் 5 மைல் பாயும் ஆட்லறிகளும் கிடைத்துள்ளன. புலிகள் பொதுவாக துப்பாக்கிகள், ரொக்கட் ஏவாயுதங்கள் என்பவற்றுடன் குறு

[கிளிநொச்சி]

பூநகரி, நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது பலியாகிய சிறிலங்கா இராணுவத்தினரின் சுமார் 168 சடலங்கள் நேற்று இரவு கிளிநொச்சியில் தகனம் செய்யப்பட இருந்தது.

இச் சடலங்களை தாம் ஏற்றுக் கொள்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சிறிலங்கா அரசு அறிவித்திருந்தது. நேற்றுக்காலை 10 மணியளவில் இவ் அறிவித்தல் வெளியாகியது. பின்னர் 11·00 மணியளவில் இச் சடலங்களை ஏற்க முடியாது என்று அரசு அறிவித்ததாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்துஇச் சடலங்களை தகனம் செய்வதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. தகனம் செய்வதற்கு முன்னர் கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட வைத்திய அதிகாரியும் இச் சடலங்களைப் பார்வையிட்டனர்.

## பூநகரி முகாம் தகர்ப்பில் ஹமில்டனின் உறவினர் பலி

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பின் போது கொல்லப்பட்ட பெருந்தொகையான படையினருள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் உறவினர் ஒருவரும் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஹமில்டனின் சகோதரியின் மகனான மேஜர் பந்துல வனசிங்க கொல்லப்பட்டவராவார். ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையின் போதும் ஹமில்டன் வனசிங்கவின் நெருங்கிய உறவினர் ஒருவர் பலியானது குறிப்பிடத்தக்கது.

## காயப்பட்ட படையினரை மீட்க நடவடிக்கை

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் நண்பகல் 2.30 மணியளவில் இராணுவ அதிரடிப்படையினரும் வேறுப் படைப் பிரிவுகளும் பூநகரியை வந்தடைந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார். 800 படையினர் மேற்கு கரையோரமாக இறக்கப்பட்டனர் எனவும் சுமார் 450 படையினர் ஆகாயமூலம் நேற்றுதரையிறக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த 1250 படையினரும் பூநகரியில் சிக்கியிருந்த 450 படையினருடன் இணைந்துள்ளதாகவும் உயிரிழந்த படையினரின் சடலங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அவர்களின் அஸ்தி சமீபத்தில் உள்ள இராணுவ முகாமிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயப்பட்ட படையினரை மீட்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பிரிகேடியர் அங்கமன கூறினார். இதேவேளை பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் மேலதிக படைகள் மீட்பு நடவடிக்கையை பூர்த்தி செய்யும் வரையில் கொல்லப்பட்ட சரியானபடையினரின் எண்ணிக்கை தெரியவராது எனவும் படையினரின் உறவினரும் பொது மக்களும் வீண் வதந்திகளை நம்பாது அமைதியாக இருக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் தேடுதல் மீட்பு பணிகள் பூர்த்தியானதும் சரியான விபரங்கள் வெளியிடப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இம் முகாமில் 2000 படையினர் தங்கியிருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

பூநகரி

எனவும் சிங்கள இனவாதக் குழுக்கள் தற்போது வெளிப்படையாக எதனையும் செய்ய முயற்சிக்கவில்லை ஆனால் மறைமுகமாக ஏதாவதுசெய்ய எத்தனிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

எனினும் எதிர்க் கட்சிகள் மிக மோசமான முறையில் அரசாங்கத்தை தாக்கிவருவதாகவும் அரசாங்கம் தேவையற்ற வேடிக்கை நிகழ்ச்சிகளைக் குறைத்து போரில் ஈடுபாடு காட்டவேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்திவருகின்றன என மேலும் அவர் தெரிவித்தார்.

பூநகரியில்

இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

நாடு பிளவுபடக்கூடாது என அரசு உண்மையிலேயே விரும்பின் கட்டாய இராணுவ சேவையை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என ஐலண்ட் பத்திரிகை கூறியுள்ளது. வறுமையில் வாடும் ஏழை இளைஞர்கள் மட்டுமே இராணுவத்தில் சேர்வதாகவும் அரசியலிலும், சமுதாயத்திலும் உயர்மட்டத்தில் இருப்பவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் ஐலண்ட் குற்றஞ்சாட்டியுள்ளது.

எத்தனை அரசியல் வாதிகளின் பிள்ளைகள் நாட்டிற்காக போராடுகின்றனர் என்றும் ஐலண்ட் கேள்வி எழுப்பியுள்ளது.

## அலுவலகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டக் கல்வி அலுவலக திறப்புவிழா இன்று பகல் 12.10 க்கு கல்வித் திணைக்கள வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் கல்விக் கழக பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் தேசியக் கொடியை ஏற்றிவைக்கவுள்ளார்.

## குமாரியில் தபால்பொதிகள்

நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் குமாரி கப்பலில் வட பகுதிக்கான தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வீரச்சாவு

சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த மேஜர் பூவழகு/விக்கி [சண்முகநாதன் விக்னேஸ்வரன் 6ஆம் வட்டாரம் நயினாதீவு] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ ★

பூநகரியில் கடந்த 30ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதல் ஒன்றின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நித்தி [துரைராஜசிங்கம் சுந்தரேஸ்வரன்- பழம்பாசி நெடுங்கேணி] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வணக்க கூட்டத்தை தொடர்ந்து விடுதலைப்புலிகள்

கடற்

பி. ப. 4 00 மணிக்கு புத்தூர் மாவீரர் மண்டபத்தை வந்தடையும். அங்கு அஞ்சலிக்கூட்டம் நடாத்தப்படடு அதன் பின்னர் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு வந்தடைந்து துயிலுமில்லத்தில் கடற்கரும் புலி மேஜர்கணேசுக்கு நினைவுக்கல் நாட்டப்படும்.

பூநகரி முகாம்

தெளிவான பதிலைச் சொல்ல முடியாத நிலையில் இராணுவ அதிகாரிகள் இருப்பதால்பெற்றோரும உறவினரும் மிகவும் கோபம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட, காயமடைந்த மற்றும் காணாமல் போன படையினரின் விபரம் சரிவரப் பெறமுடியாது போனமையால், இவ் விபரங்களை தெரிவிக்க தாமதமாகும் ஒவ்வொரு கணமும் நெருக்கடிகளை உருவாக்கும் என இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி

பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்றதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன பலவீடுகள் எரிந்தநிலையில் காணப்பட்டன.

மேற்படி குடியிருப்புப்பகுதிகள்மீது தாக்குதல் நடாத்திய விமானங்கள்மீது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடாத்தினர்

மேலும் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வரணிப் பகுதியில் பொது மக்களின் குடியிருப்புக்கள்மீது சிறிலங்கா விமானப்படையினர் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று மாலை 5. 45 மணியளவில் மேற்படி பகுதிக்கு வந்த இரண்டு சுப்பர்சொனிக் ரக குண்டுவீச்சு விமானங்கள் இப்பகுதிமீது பல தடவை குண்டுத் தாக்குதல்களை நடாத்தின அத்துடன் ரொக்கட் தாக்குதலும்நடாத்தப்பட்டது இத்தாக்குதல்களால்இப் பகுதியைச் சேர்ந்த ஏழு பேர் பலத்த காயம் அடைந்தனர்.

என் நாகேஸ்வரி(வயது18), கே இராஜபூபதி (வயது 21), கே புஸ்பமலர்(வயது19), ஏ சிவகுமார் (வயது 17), எஸ். இராசிமணி (வயது 13), வ. இராசம்மா (வயது65 , இளங்குமரன் ( வயது 11 ) ஆகியோரே இத்தாக்குதலில் பலத்த காயமடைந்துள்ளனர்.

மேலும் இத்தாக்குதல்களால் வரணி வயிரவர் கோயில் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும் பல பொது மக்களின் குடியிருப்புக்களும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

(86) (க) (நி) (ச)

நிறைவேறியது.

இதைத் தொடர்ந்து செயற்குழு கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி விஜேதுங்க வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்க அனைவரும் முன்வரவேண்டும் எனவும் அங்கு நிகழ்வது இனப் பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினையே எனவும் கூறினார்.

25 கோடி

புர இராணுவ முகாமின் மீது புலிகள் நடத்திய தாக்குதலிலும் இதே கதைதான். புலிகள் படையினமிடமிருந்துகைப்பற்றிய ஆயுதங்களை கொண்டு அந்த ஆயுதபலம் மூலம் படையினரை தாக்கினரனர் என்பதையே இத் தாக்குதல் காட்டுகின்றது. நெடுந்தூரம் சென்று தாக்கும் ஆயுதம் கைப்பற்றப்பட்டது. வடபகுதியை சுற்றிய 5இராணுவ முகாம்களும் இப்போது ஆபத்தான நிலையில் இருப்பதை காட்டுகிறது

இந்த சமயம் வான்வழியாக குடாநாட்டில் படையினர் தாக்குதல் நடத்துவதாக பாதுகாப்புத் துறை தலைவர் ஹமிடன் வனசிங்க கூறுகிறார். இத்தாக்குதலினால் தேவாலயம், யாழ் அரச அதிபர் அலுவலகம் என்பன சேதம் அடைந்ததை ஹமில்டன் வனசிங்க ஒப்புக் கொண்டார். இது ஓர் துரதிர்ஷ்ட தவறு என அவர் கூறினார். நகரின் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் விமானத்தாக்குதல் நடந்திருக்கின்றது என பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

பூநகரி படைத்

கைப்பற்றிச் சென்ற ஆயுதங்கள் பல விடுதலைப் புலிகள் இதுவரை பயன்படுத்தாதவை என்றும், இனிமேல் அவ் ஆயுதங்கள் விடுதலைப்புலிகள் பயன்படுத்தினால் இராணுவம் புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதனால் பாதுகாப்பு வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளன.

இதேவேளை, பூநகரியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியானது அரசியலில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது அரசாங்கத்தின் மீது பல தரப்பில் இருந்து கண்டனங்கள் எழுந்துள்ள அதேவேளை, பூநகரி இராணுவ முகாமில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் பெற்றோர்கள், உறவினர்கள் பேரின் உண்மை நிலையை வெளியிடுமாறும், முகாமிலிருந்த படையினரின் நிலை என்ன என்பதை விளக்குமாறும் நெருக்கடி கொடுத்தும் வருகின்றனர். இந்நிலையானது, அரசாங்க வட்டாரங்களிலும் பெரும் நெருக்கடியாக மாறிவருகின்றது எனத் தெரியவருகின்றது.